**செய்தி வெளியீடு எண்: 991** **நாள்:22.12.2020**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>"சிப்காட்" தொழிற்பூங்காக்களில் முதன்முறையாக பசுமை வளம் பெருகிட, ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் 2.63 இலட்சம் மரக்கன்றுகள் நடுதல்</u>

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) தொழில் பூங்காக்கள் உள்ள இடங்களை மேம்படுத்தும் வகையில், சுற்றுச் சூழலைப் பாதுகாத்து மக்கள் உடல்நலத்தோடு வாழ்ந்திட, அரசுக்குத் துணை நின்று, பசுமை வளம் சிறக்கப் பல்வேறு நற்பணிகளை முனைப்புடன் ஆற்றி வருகின்றது.

உயிர்வளி (Oxygen)–க்கு ஊறு வாராது காப்பது பசுமை வளமே என்பது பலரறிந்த ஒன்றாகும்.

அவ்வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய குறிக்கோளையும் திறன்மிகு செயல் திட்டங்களையும், உள் வாங்கிக் கொண்டு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) பசுமை வள மேம்பாட்டிற்குப் பல்வேறு நிலைகளில் பங்களித்து வருகிறது.

33,776 ஏக்கர் நிலப்பரப்பளவில், 15 மாவட்டங்களில், ஏழு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உள்ளிட்ட 23 தொழில் பூங்காக்களுடன் தொழில் வளர்ச்சி நிறுவனங்களில் மிகப்பெரும் நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வரும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) கடந்த 2019 ஆம் ஆண்டு, ஜீலைத் திங்கள் 19–ஆம் நாளன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்தபடி, அனைத்துத் தொழில்பூங்காக்களிலும் மரக்கன்றுகளை நட்டு, அவற்றை சரிவரப் பேணி, திரும்பும் திசையெல்லாம் பச்சைப்பசேலென செடிகளும், செடிகள் வளர்ந்த நிலையில் மரங்களும் புன்னகைக்கின்ற காட்சியினை முறையாக உருவாக்கும் அரும் பணியினைத் மேற்கொண்டு வருகின்றது.

அரசின் வனத்துறையால் தோட்டத்தில் வைத்து வளர்க்கப்படும் மரக்கன்றுகளில், 2.60 லட்ச மரக்கன்றுகளை ரூ.10 கோடி (ரூபாய் பத்து கோடி) செலவில், 19 தொழிற் பூங்காக்களில் நடுவதற்குத் திட்டமிடப்பட்டு, இதுவரையில் ஏறத்தாழ 2,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

செய்யாறு, ராணிப்பேட்டை, கடலூர், திருப்பெரும்புதூர், ஒரகடம், ஒசூர், நிலக்கோட்டை, சிறுசேரி, இருங்காட்டுக்கோட்டை உள்ளிட்ட 18 தொழிற்பூங்காக்களில் உள்நாட்டு / உள்ளூர் மரக்கன்று வகைகளான, வேம்பு, புளிபுங்கன், மருது, நீர்மருது, நீர்மத்து, பூவரசு, ஆல், நாவல், ஜம்புநாவல், கொய்யா, மா, தான்றி, மரமல்லி, கொடுக்காபுளி, சொர்கம், அரசு, மகாகனி, இலுப்பை, சில்வர் ஒக், அசோகா, இயல்வாகை, ஆயன், மந்தாரை, வசந்தமல்லி, பாசடி, பாதாம், நெல்லி, பலா, வாகை, ஆவி, தூங்குவகை ஆகிய முப்பத்திரண்டு வகைக் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள மரக்கன்றுகளும் வரும் 2021–ஆம் ஆண்டு, ஜனவரி திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டு, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

**பேணுகை**

நடப்பட்ட கன்றுகள் செழித்தோங்கி வளர்ந்து, தூய காற்றை நல்கி, பசுமைப் பொலிவைச் சிந்தி, நிழல் தந்து, கோடை வெம்மையின் கடுமை தணித்து, மக்களின் கண்களுக்கு விருந்தளித்து, மனத்திற்கு இதம் தர வைக்க வேண்டிய முதன்மையான பொறுப்பையும் சிப்காட் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

தேவையான மஸ்தூர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களைக் கொண்டு, அவர்களுக்கு சீருடை, காலணி, கையுறை வழங்கியும், அவர்கள் பயணிக்க ஊர்தியும் ஏற்பாடு செய்தும், அவர்களுக்குத் தேவையான கதிர் அரிவாள், பாண்டல், களைக் கொட்டு, கூர்முனைக்கருவி, உழுவான்கள் இவற்றையெல்லாம், போதிய எண்ணிக்கையில், ஏறத்தாழ 20 இலட்ச (இருபது இலட்சம்) ரூபாய் செலவில் வழங்கியும் உள்ளது.

**நோக்கம்**

இவ்வாறாகத் தொய்வின்றி, தொழிற்பூங்காக்களின் பசுமை வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்து வரும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) நம் மாநிலத்தோரும், பிற நாட்டினரும் நமது மாநிலத்தின் தொழில்வளர்ச்சிக்காக இடங்களைத் தெரிவு செய்து, முதலீடு செய்ய பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது.

**மேலாண் இயக்குநர்**
**சிப்காட்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**